# கோவிட்-19 தடுப்பூசிக்குப் பிறகு ஏற்படும் இதயத்தசை அழற்சி நோய்: பெற்றோர் மற்றும் இளம் வயதுடையவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

Vaccinate WA
CovidVaccineWA.org

## இதயத்தசை அழற்சி (myocardities) என்றால் என்ன?

இதயத்தசை அழற்சி (Myocarditis) மற்றும் இதய உறை அழற்சி (Pericarditis) என்பவை இதயத்தில் அல்லது அதைச் சுற்றியுள்ள வீக்கத்தை விவரிக்கும் சொற்களாகும். பொதுவான அறிகுறிகள் மார்பு வலி, சுவாசிப்பதில் சிரமம் மற்றும் இதயம் மிக வேகமாக துடிப்பது போன்ற உணர்வு. வைரஸ்கள் போன்ற தொற்றுநோய்க்கு பதிலளிக்கும் விதமாக உடலின் நோயெதிர்ப்பு சக்தியானது பெரும்பாலும் இந்த வீக்கத்தை உண்டாக்குகிறது.

## இதயத்தசை அழற்சி நோய் பொதுவாக காணப்படுவதில்லை மேலும் அதனால் மரணம் நிகழ்வதும் அரிது.

ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்காவில் 200,000 க்கும் குறைவான இதயத்தசை அழற்சி வழக்குகள் நிகழ்கின்றன, அவற்றில் 2% க்கும் குறைவானவையே மரணத்தில் முடிகின்றன. அமெரிக்காவில் கோவிட்-19 தடுப்பூசியால் ஏற்படுவதாக கண்டறியப்படும் இதயத்தசை அழற்சியினால் இறப்புகள் நிகழ்வதில்லை.

- இது தொற்றுநோய் என்பதாகவும் தெரியவில்லை
- பெரும்பாலான மக்கள் மிகவும் சாதாரமான அளவிலேயே பாதிக்கப்பட்டுள்ளனர்
- அறிகுறிகளை கவனம் செலுத்தி சிகிச்சை அளிப்பதும் பொதுவாக குறைவாகவே இருக்கும்

## இது கோவிட்-19 தடுப்பூசிக்கு தொடர்பு உடையதா?

சாத்தியம் உள்ளது. தடுப்பூசிக்குப் பிறகு ஆபத்து ஏற்படுவது மிகவும் அரிதானது, ஆனால் அது நடக்கலாம். தடுப்பூசி போடாத மக்களுக்கும் இதயத்தசை அழற்சி நோய் ஏற்படுகிறது.

அதை நிராகரிக்க முடியாது என்பதால், ஒரு CDC (Centers for Disease Control and Prevention), நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள்) பாதுகாப்பு குழு இதயத்தசை அழற்சி மற்றும் இதய உறை அழற்சி மற்றும் mRNA கோவிட்-19 தடுப்பூசிகளுக்கு இடையே ஒரு "சாத்தியமான தொடர்பு" இருப்பதை கண்டறிந்துள்ளது (Moderna மற்றும் Pfizer-BioNTech தயாரித்தது).

## தடுப்பூசிக்குப் பிறகு நான் என்ன அடையாளங்களையும் அறிகுறிகளையும் கவனிக்க வேண்டும்?

இவ்வகை நோய்கள் பெரும்பாலும் இளம் வயதினரிடமும், 30 வயதிற்குட்பட்ட இளம் ஆண்களிடமும் காணப்பட்டுள்ளன இரண்டாவது டோஸுக்குப் பிறகு அறிகுறிகள் மிகவும் பொதுவானதாகத் தோன்றுகின்றன.

சமீபத்தில் தடுப்பூசி போடப்பட்டவர்கள், தடுப்பூசி போட்ட பிறகு, குறிப்பாக தடுப்பூசி போட்ட முதல் வாரத்தில், இந்த அறிகுறிகளில் ஏதேனும் ஒன்றை கண்டால் மருத்துவ உதவியை நாட CDC பரிந்துரைக்கிறது:

- நெஞ்சு வலி
- மூச்சு விடுவதில் சிரமம்
- வேகமாக துடிப்பது, படபடப்பது அல்லது அதிகமான இதயத் துடிப்பு போன்ற உணர்வுகள்.

இத்தகைய அறிகுறிகள் நிகழும் வாய்ப்பு மிக அரிதானவை. இருப்பினும், இந்த அறிகுறிகளில் ஏதாவது ஒன்றேனும் உங்களுக்கு ஏற்பட்டால், உடனே மருத்துவ உதவியைப் பெறுங்கள்.

எந்தவொரு கோவிட்-19 தடுப்பூசியும் செலுத்தப்பட்ட முதல் வாரத்தில் காய்ச்சல், தலைவலி, சோர்வு, மூட்டு/தசை வலி உள்ளிட்ட **லேசானது முதல் மிதமான அறிகுறிகள் ஏற்படுவது, இயல்பானது தான்.** இந்த பக்க விளைவுகள் பொதுவாக தடுப்பூசி செலுத்திக் கொண்ட பிறகு மூன்று நாட்களுக்குள் தொடங்கி சில நாட்கள் மட்டுமே நீடிக்கும்.

## தடுப்பூசி போட்டுக் கொள்வதே இன்னமும் சிறந்த முடிவாகும்.

தடுப்பூசிகளின் வலுவான நன்மைகள் இதயத்தசை அழற்சியின் அபாயத்தை விட அதிகமாக உள்ளன. மரணம் மற்றும் நோயைத் தடுப்பதில் இந்த தடுப்பூசி மிகவும் பயனுள்ளதாக உள்ளது மற்றும் புதிய, மிகவும் ஆபத்தான மாறுபட்ட வைரஸ்களுக்கு எதிரான பாதுகாப்பையும் உள்ளடக்கியது.

Washington State Department of Health

DOH 348-835 August 2021 - Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோர, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள்திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov க்கு மின்னஞ்சல் செய்யவும்.